# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2049 ● செப்டம்பர் 15, 2018 Weekly E-paper ● September 15, 2018




## மோடி அரசு

# வெளுக்கும் சாயம்


பேரறிவாளன் உள்ளிட்ட

## ஏழு தமிழரை

விடுதலை செய்க!

## கருத்தரங்கம்

நாள்

18.09.2018

செவ்வாய் மாலை 6.30 மணி

இடம்

தளபதி ஸ்டாலின் இலவச பயிற்சி மையம்,
புதுக் குளம் சாலை, நுங்கம்பாக்கம்,
(வள்ளுவர் கோட்டம் அருகில்), சென்னை-34

வரவேற்புரை
தோழர் சாந்தசீலன்

தொகுப்புரை:
தோழர் எட்வின்

தலைமை
தோழர் சிங்கராயர்

முன்னிலை:
தோழர் மு.மாறன்
தோழர் முத்தையாகுமரன்

கருத்துரை
தோழர் சுப.வீரபாண்டியன்
வழக்கறிஞர் கே.எஸ்.ராதாகிருஷ்ணன்
தோழர் மகாலட்சுமி
தோழர் தமிழ்மறவன்

நன்றியுரை
வளசை கணேசன்

திராவிட இயக்கத் தமிழர் பேரவை, சென்னை மாவட்டம்

ஏழு தமிழர்களின் உயிர் காக்க எட்டுக் கோடித் தமிழர்களே எழுக!

### மோடி அரசு

# வெளுக்கும் சாயம்

**வெற்றிச்செல்வன்**



கார்ப்பரேட் முதலாளிகளின் கைப்பாவையே மோடி அரசு என்பதைத் தற்போது நடக்கும் நிகழ்வுகள் மெய்ப்பித்து வருகின்றன. இந்தியாவின் பொதுத்துறை வங்கிகளில் 9,000 கோடி கடனாகப் பெற்று, லண்டனுக்குத் தப்பிச் சென்ற விஜய் மல்லையா, நாட்டை விட்டு வெளியேறும் முன்னர் நிதியமைச்சர் அருண் ஜெட்லியைச் சந்தித்ததாக லண்டன் நீதிமன்றத்திலேயே கூறியுள்ளது, அனைவரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

இருவரது சந்திப்பை நேரில் பார்த்ததாகக் காங்கிரஸ் மூத்த தலைவர் பி.எல்.புனியா கூறியிருப்பதோடு, நாடாளுமன்ற சிசிடிவி கேமராக்களில் இச்சந்திப்பு பதிவாகியிருக்கும் என்றும் தெரிவித்துள்ளார். இச்சந்திப்பை அருண் ஜேட்லி மறுத்திருக்கும் நிலையில், பாஜகவின் சுப்பிரமணிய சாமியோ மல்லையா அருண் ஜேட்லியை சந்தித்துப் பேசியதாக ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

உச்சநீதிமன்ற மூத்த வழக்கறிஞரான துஷ்யந்த் தவே, மல்லையா தப்பிச் செல்வதற்கு நான்கு நாட்களுக்கு முன்னரே அவரைத் தடுக்க உச்சநீதிமன்றத்தை அணுகுமாறு எஸ்.பி.ஐ. வங்கிக்கு அறிவுறுத்தியதாகவும், அந்த அறிவுரையை எஸ்.பி.ஐ. வங்கி புறந்தள்ளியதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மல்லையா–ஜெட்லி சந்திப்பு பல்வேறு சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

நிதி அமைச்சருக்கும், மல்லையாவுக்கும் நடந்த சந்திப்பின் ரகசியம் என்ன?

நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் மல்லையா உள்துறை அமைச்சகத்தின் அனுமதி இன்றி வெளிநாடு செல்ல இயலாது. அவ்வாறிருக்க அவருக்கு அனுமதி அளிக்கப்பட்டதன் பின்னணி என்ன?

முதலில் மல்லையாவுக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்டிருந்த சி. பி. ஐ இன் Look out notice இல் “கைது” (detain) என்றிருந்தது, “தகவல் தெரிவித்தால் போதுமானது” (inform) என்பதாக நீர்த்துப் போகச் செய்ததன் காரணம் என்ன? பிரதமர் ஒப்புதல் இல்லாமல் இவ்வாறு நடக்க இயலுமா?

மல்லையா குறித்து சி.பி.ஐ. அல்லது அமலாக்கத் துறைக்கு (ED) நிதியமைச்சர் தகவல் தெரிவிக்காதது ஏன்?

இக்கேள்விகளுக்குப் பதில் சொல்லும் தார்மீகப் பொறுப்பு நடுவண் அரசுக்கு உள்ளது. தன் மீது உள்ள குற்றச்சாட்டுகளுக்கு நேர்மையான விளக்கம் அளிக்க இயலாத நிலையில், அருண் ஜேட்லி நிதியமைச்சர் பதவியிலிருந்து விலகி, விசாரணையை எதிர்கொள்வதே அரசின் மீது உள்ள நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும்.

நாட்டு மக்களுக்கு முன்னால் அம்பலப்பட்டு நிற்கிறது மோடி அரசு. ஏழைத் தாயின் மகன் என்ன பதில் சொல்கிறார் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். ●



விரைவில்
உதயமாகிறது

# கருஞ்சட்டைப் பதிப்பகம்

விவரங்கள் அடுத்த இதழில்



# சுபவீ பக்கம்



# சோபியா!
## ஒரு விளக்கம்!

ஒரு விமானப் பயணத்தில், பா.ஜ.க. வின் மாநிலச் செயலாளர் தமிழிசை அவர்களைப் பார்த்து, சோபியா என்னும் கனடாவில் படிக்கும் மாணவி, "பாசிச பா.ஜ.க. ஆட்சி ஒழிக" என்று முழக்கமிட்டார் என்ற செய்தி சென்ற வாரம் முழுவதும் பரபரப்பாகப் பேசப்பட்டது. அது குறித்து, நம் ஆசிரியர் குழு உறுப்பினர், தோழர் உதயகுமார், ஒரு செய்தியைப் பதிவு செய்திருந்தார். அந்தப் பதிவு குறித்துச் சற்று வேறுபட்ட என் பார்வையை இங்கு கூற வேண்டியுள்ளது.

இதில் மூன்று செய்திகள் கவனிக்கப்பட வேண்டியவை என்று கூறலாம். (1). சோபியாவின் கூற்று எதுவும் பெறப்படாமல், ஒரு பக்கச் செய்தியை மட்டுமே கொண்டு நம் ஊடகங்கள் விவாதித்தன. (2). தமிழிசையின் கூற்றுப்படியும், சோபியா வன்முறையைத் தூண்டும் வகையிலோ, அருவெறுப்பான சொற்களாலோ எந்த முழக்கத்தையும் எழுப்பவில்லை. (3) விமான நிலையத்தில், சோபியாவிற்கு எதிராகத்தான், ஆபாசமான சொற்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன. கைது நடவடிக்கையும் செய்யப்பட்டுள்ளது. இப்போது அவருடைய கடவுச் சீட்டை முடக்குவதற்கான முயற்சிகளும் நடந்து வருகின்றன.

சோபியாவின் பக்கம் குறையாகச் சொல்லப்படுவது, அவர் முழக்கமிட்ட இடம் தவறு என்பதுதான். அதற்கு இத்தனை ஆபாசச் சொற்களா? இவ்வளவு கடுமையான ஒடுக்குமுறை முயற்சிகளா? விமானம் முழக்கமிடுவதற்கான இடமா என்று கேட்கின்றனர். இல்லைதான். அதற்காக இவ்வளவு எதிர்வினை புரிவது என்பது எவ்விதத்தில் நியாயம்? பா.ஜ.க. ஆட்சி பாசிச ஆட்சிதான் என்பது இதன்மூலம் உறுதியாகின்றது.

தமிழிசை இதனை எளிமையாகக் கடந்து போயிருக்கலாம். அல்லது, காவல்துறையிடம் ஒரு புகார் கொடுத்துவிட்டுத் தன் பணிகளுக்குச் சென்றிக்கலாம். இவ்வளவு பெரிதாய் இதனை ஆக்கியதன் மூலம், சோபியாவையும், அவர் முழக்கத்தையும் நாடறியச் செய்துள்ளார் என்பதே உண்மை.

எப்படியோ, பாசிச பா.ஜ.க. ஆட்சி ஒழிக என்னும் முழக்கத்தை எல்லோரிடமும் கொண்டு சேர்த்தமைக்காகத் தமிழிசைக்கு நாம் ஒரு நன்றி சொல்லத்தான் வேண்டும்!

●

## வினாவும்? விடையும்!



**விநாயகர் சதுர்த்தி போன்ற நாட்களில், தமிழ்த் தொலைக்காட்சிகள், குறிப்பாக திமுக தலைமைச் சார்புடைய கலைஞர், சன் தொலைக்காட்சிகளில் வருடா வருடம் கொண்டாடப்பட்டு, மூட நம்பிக்கைகள் மக்கள் மனங்களில் பதிக்கப்படுகிறதே....கொள்கைகள் வியாபாரத்தில் தோற்கிறதே!**

**- கோ.அமிர்தராஜ், சிங்கப்பூர்**

**சுபவீ விடை**

சன் தொலைக்காட்சி, தி.மு.க. தலைமைச் சார்புடையதன்று. கலைஞர் தொலைக்காட்சி மட்டுமே, திமுக வின் அதிகாரபூர்வத் தொலைக்காட்சி. அதில் விநாயகர் சதுர்த்தி விழாக் கொண்டாட்டமாக ஏதேனும் ஒரு நிகழ்ச்சி வந்திருந்தால் எடுத்துக் காட்டுங்கள். விடுமுறை நாள் என்பதால் திரைப்படங்கள், பட்டிமன்றங்கள் போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெறும் அல்லாமல், மதத்தைப் போற்றும் நிகழ்வு ஏதும் இடம்பெற்றதில்லை. அன்றாடம் ராசி பலன் நிகழ்ச்சி கூட, கலைஞரில் கிடையாது. எப்படியாவது திமுகவைக் குறை கூறிட வேண்டும் என்று விரும்புகின்றவர்களில் ஒருவராய் நீங்கள் இருக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன்!

## அன்பிற்குமுண்டோ...



இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், மும்பை கோரேகான் தமிழ்ச் சங்கத்தில், நண்பர் சீனிவாசன் அவர்களின் அழைப்பை ஏற்று, இலக்கியத் தொடர் உரை ஆற்றச் சென்றிருந்தேன். முதல் நாள் கூட்டம் தொடங்கும் வேளையில், 'அய்யர் வரார், அய்யர் வரார்' என்று சொல்லி ஓடிப்போய் ஒரு முதியவரை உள்ளே அழைத்து வந்தனர். அப்போது அவருக்கு வயது 92. இயற்பெயர் எம்.எஸ்.ஸ்ரீனிவாசன்.

அந்தப் பெரியவர் மிகுந்த பண்புடன் என்னை அணுகி, "என்னால ரொம்ப நேரம் உக்கார முடியாது. சத்த நாழி இருந்துட்டுப் புறப்படறேன். தப்பா நெனைச்சுக்காதீங்க" என்றார். இந்த வயதில் நீங்கள் வந்ததே என்னைப் பெருமைப்படுத்துகிறது. எப்போது வேண்டுமானாலும் புறப்படுங்கள் என்றேன்.

அன்று நான் ஒரு மணி நேரத்திற்கும் மேலாகப் பேசினேன். அந்தப் பெரியவர் இடையில் புறப்படவில்லை. முழுப் பேச்சையும் சுவைத்துக் கேட்டார். வியப்பு என்னவெனில், அடுத்தடுத்த நாள்களிலும், தவறாது குறித்த நேரத்திற்கு வந்து, மூன்று நாள்களிலும் என் உரைகளை முழுமையாகக் கேட்டார்.

மூன்றாவது நாள் உரை முடிந்தபின், அருகில் வந்து, என் கைகளைப் பற்றிக் கொண்டு, என்னைப் பாராட்டினார். இந்த வயதிலும் புதிய செய்திகளை உங்கள் பேச்சிலிருந்து நான் அறிந்து கொண்டேன் என்று பெருந்தன்மையோடு கூறினார். நான் கூறிய சில கருத்துகளில் தனக்கு உடன்பாடு இல்லையென்றாலும். யாரையும் காயப்படுத்தாமல் அவற்றைக் கூறியதாகச் சொன்னார். அந்த அன்பு என்னை நெகிழ வைத்தது.

சில நாள்களுக்கு முன்பு, மும்பையிலிருந்து பேசிய நண்பர், ஹெச்.கே.மணி, அந்தப் பெரியவர், சில நாள்களுக்கு முன்பு, தன் 94 ஆவது வயதில் இறந்துவிட்டார் என்ற செய்தியைக் கூறினார்.

அந்தப் பெரியவர் காட்டிய அன்பும், ஜனநாயகப் பண்பும் என் நெஞ்சில் நிறைந்திருக்கின்றன. அன்பிற்குமுண்டோ அடைக்குந்தாழ்..!

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**
**www.peravai.com**
**www.peravainoolagam.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

## கலைஞருக்குப் புகழ் வணக்கம்



***11.09.2018*** அன்று மாலை சென்னை போரூர், கட்டுமரம் உணவக அரங்கில் "தலைவர் கலைஞருக்குப் புகழ் வணக்கம்" நிகழ்வு திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சென்னை, காஞ்சி, திருவள்ளூர் மாவட்டங்களின் சார்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்குப் பேரவையின் துணைப் பொதுச்செயலாளர் ஆ.சிங்கராயர் தலைமை வகிக்க, திருவள்ளூர் மாவட்டத் தலைவர் தோழர் சூர்யா வரவேற்புரை ஆற்றினார். தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, மதுரவாயல் பகுதி தி.மு.க. செயலாளர் க.கணபதி ஆகியோர் புகழ் வணக்க உரை ஆற்றிய பின்னர் பேரவைப் பொதுச்செயலாளர் நிறைவுரை ஆற்றினார். காஞ்சி மாவட்டச் செயலாளர் தோழர் இளமாறன் நன்றியுரை ஆற்றினார்.

## மதுரை: அமைப்புக் கூட்டம்



**ம**துரை மாவட்டத்தில் நடைபெற்ற அமைப்புக் கூட்டத்தில் தென் மண்டல அமைப்பாளர் செயம்பெருமாள், மாநில இலக்கிய அணி அமைப்பாளர் புலவர் செயபால் சண்முகம், மாநில இளைஞரணித் துணை அமைப்பாளர் சரவணன், மாவட்டச் செயலாளர்கள் தம்பி பிரபு, அமர்நாத், மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கருப்பையா, மருத்துவர் அன்புமதி மற்றும் தோழர்கள் பங்கேற்றனர்.

பேரவையில் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள புலவர் செயபால் சண்முகம், சரவணன் இருவருக்கும் வாழ்த்துகள் தெரிவித்தும், விரைவில் இளைஞரணி சார்பில் முதல் பயிலரங்கத்தை மதுரையில் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## எழுவரின் விடுதலை?

**எ**து நடக்க வேண்டும் என்று நினைத்தோமோ, அது நடக்கவில்லை.

எது நடக்கக் கூடாது என்று எதிர்பார்த்தோமோ, அது நடந்துவிட்டது.

சட்டப் பிரிவு 161இன் படி தமிழக அரசு இயற்றிய தீர்மானத்தை, சட்டப் பிரிவு 162இன் படி தமிழக ஆளுநர் கையொப்பமிட்டு நிறைவேற்றவில்லை.

குற்றவாளிகளாகக் கருதிச் சிறையில் அடைபட்டுக் கிடக்கும் எழுவரின் விடுதலைக்குத் தமிழக ஆளுநர் ஏற்பிசைவு வழங்காமல், மத்திய உள்துறை அமைச்சகத்திற்குப் பரிந்துரை செய்திருக்கிறார் என்பது வேதனையைத் தருகிறது.

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த அவர்களின் தண்டனை, வாழ்நாள் தண்டனையாக மாற்றப்பட்டு 27 ஆண்டுகளைக் கடந்து சிறையில் இருப்பதே மிகப் பெரும் தண்டனை.

தண்டனை என்பதே திருந்துவதற்குத்தான். மாறாகக் காலம் முழுவதும் சிறைக் கொட்டடியில் போட்டு வாட்டி வதைப்பதற்கு அன்று.

இராஜிவ் காந்தியின் மரணத்திற்குப் பின், அவரின் குடும்பத்தினரே நாங்கள் அவர்களை மன்னித்துவிட்டோம் என்று சொன்னபிறகும் கூட, தமிழக காங்கிரஸ் கட்சியின் இன்றைய தலைவர் திருநாவுக்கரசர் தன்னிச்சையாக கருத்து சொல்லிக் கொண்டிருக்கிறார்.

எழுவரையும் விடுதலை செய்தால் அது விபரீதங்களை ஏற்படுத்தும், பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்று சொல்கிறார்.

என்ன பின்விளைவுகளை ஏற்படுத்தும்?

தமிழகமே அந்த எழுவரின் விடுதலையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நிலையில் முன்னாள் பா.ஜ.க. காரரான இந்நாள் காங்கிரஸ் தலைவர் திருநாவுக்கரசர் இப்படிச் சொல்வதுதான் விபரீதமாக இருக்கிறது.

எல்லாவற்றிற்கும் மேல் மத்திய அரசால் நியமிக்கப்பட்ட தமிழக ஆளுநர், ஆளுநராகச் செயல்படாமல் மத்திய அரசின் 'ஏஜண்டாக'த்தான் இன்னமும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.

இவர் மத்திய உள்துறைக்கு அனுப்பிய தமிழகத் தீர்மானம் ஏழு பேர்களின் விடுதலையை கேள்விக்குறியாக்கிவிட்டது.

இது எரியும் கொள்ளிக்கட்டையின் மேல் எண்ணெயை ஊற்றுவதுபோல் இருக்கிறது.

## வேலூர்: ஆர்ப்பாட்டம், கைது!



**வே**லூரில் பெட்ரோல், டீசல் விலை உயர்வைக் கண்டித்து காங்கிரஸ் கட்சி தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில் "பாசிச பாஜக அரசு ஒழிக" என முழங்கி சாலைமறியல் செய்ததமைக்காக தி.இ.த.பே மாநில துணைப் பொதுச்செயலாளர் சிங்கராயர் மற்றும் பேரவை மாநில இளைஞரணித் துணை அமைப்பாளர் ஜெகன்நாதன், நீலகண்டன் உள்ளிட்ட தோழர்களைக் காவல்துறை கைது செய்தது.

## பெரியார் 140

# பெரியாரின் தொலைநோக்குப் பார்வை



*1955ஆம் ஆண்டு கீதா பிரஸ்ஸின் 30ஆவது ஆண்டு விழா நடைபெற்றுள்ளது. அந்த அச்சகம் ஆர்.எஸ்.எஸ் அமைப்பினுடையது. இயக்கம் தொடங்கிய 1925 ஆம் ஆண்டிலேயே அச்சகத்தையும் அவர்கள் தொடங்கியுள்ளனர். அதில் ஏறத்தாழ 60 லட்சம் கீதை புத்தகங்கள் அச்சிடப்பட்டு, 1955 ஆம் ஆண்டு வரையில் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக அவர்களின் துண்டறிக்கை சொல்கிறது. அந்த முப்பதாம் ஆண்டு விழாவில், இந்தியாவின் அன்றைய குடியரசுத் தலைவர் இராஜேந்திர பிரசாத் கலந்து கொண்டுள்ளார். (அவரே ஒரு ஆர்.எஸ்.எஸ். காரர்தான்).*

*இதற்கு மாற்றாக அன்றே தந்தை பெரியார் சிந்தித்துள்ளார். 1933–இல், பகுத்தறிவுப் பிரச்சார நூற்பதிப்புக் கழகம் (பி) லிட் என ஒரு வெளியீட்டகத்தைப் பெரியார் தொடங்கி, ராகவன் என்பவரிடம் அதன் முழுப் பொறுப்பையும் கொடுத்துள்ளார். ஒரு பங்கு ரூ.10 என்றும் 3000 பங்குகளைச் சேர்க்கத் திட்டம் என்றும் பெரியார் குறிப்பிட்டுள்ளதோடு, 250 பங்குகள் சேர்ந்து விட்டதென்றும் அறிக்கையில் கூறியுள்ளார்.*

*1933–இல் ரூ.30,000 என்பது, இன்று பல கோடி ரூபாய் மதிப்புடையது என்பதை அறிவோம். அப்போதே அப்படி ஒரு நிறுவனத்தை நிறுவி, நல்ல பகுத்தறிவுக் கருத்துடைய நூல்களைக் கொண்டுவரத் திட்டமிட்டுள்ள அய்யாவின் தொலைநோக்குப் பார்வை நமக்கு வியப்பைத் தருகிறது!*

(11.09.2018 மாலையில், திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் நடைபெற்ற கலைஞர் புகழ் வணக்கக் கூட்டத்தில், தோழர் சுபவீ)

## எதிர்வினை



சுபவீ அவர்களின் குட்கா ஊழல் கட்டுரையை வாசித்தேன். வெட்கமின்றி நடந்து கொண்டிருக்கும் தமிழக அரசைத் தோலுரித்துக் காட்டியது கட்டுரை.

*- அருணா தேவி, பெருங்களத்தூர்.*



‘சோபியா சோபியா’ கட்டுரையில், “இது பெரியாரின் சமூக போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி!” தோழர் மா.உதயகுமாரின் வரிகள் அருமை..

*- ச.பழனிவேல், கொல்கத்தா*



வெற்றிச்செல்வன் கட்டுரை அருமை.. திலகர் பற்றிய செய்தி எனக்குப் புதிது.

*- பிரேம்நாத், வேலூர்.*



நாட்டைக் காக்க மீண்டும்
அழைக்கின்றார்...
அழைக்கின்றார்...
அழைக்கின்றார்...
அண்ணா..!

# திராவிடத் தமிழர் கலை இலக்கியப் பேரவை!

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் வழிகாட்டலில், திராவிடத் தமிழர் கலை இலக்கியப் பேரவையின் அமைப்புக்கூட்டம், 07.10.2018 ஞாயிறு மாலை 5.00 மணி அளவில் திருச்சியில் நடைபெற உள்ளது. இனஉணர்வு கொண்டோர், இலக்கிய ஆர்வலர்கள், தமிழ்ப்புலவர்கள், கவிஞர்கள், அனைவரும் கலந்துகொள்ள வேண்டுகிறோம். தோழர் சுபவீ சிறப்புப் பார்வையாளராக நிகழ்ச்சியில் பங்கேற்பார்.

புலவர் செயபால் சண்முகம்
புலவர் செல்லக்கலைவாணன்
(அமைப்பாளர்கள்)

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின்

# மாவட்ட இளைஞரணிப் பொறுப்பாளர்கள்

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் இளைஞரணி அமைப்பாளர் நியமனம்:

| | |
|---|---|
| சென்னை மாவட்டம் | - நா.சிறிவித்யா, |
| காஞ்சி மாவட்டம் | - மேடவாக்கம் அன்பு, |
| வேலூர் மாவட்டம் | - உமாசங்கர், |
| திருச்சி மாவட்டம் | - பிரவின், |
| மதுரை மாவட்டம் | - கார்த்திக்கேயன், |
| திருவள்ளூர் மாவட்டம் | - விக்னேஷ்ராஜ். |

- இரா.சந்தானம்
(இளைஞரணி மாநில அமைப்பாளர்)

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.